THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# SUGGESTED SOLUTIONS

NOT FOR SALE

## KE3(B)-Fundamentals of Law

## September 2019

All Rights Reserved

# பிரிவு 01

**விடை 01**

1.1

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 1.3.1<br>இலங்கையிலுள்ள நீதிமன்றங்களையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் இனங்காணல். |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 13, 16 & 20 |
| **சரியான விடை : C** |

1.2

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 2.1.1<br>வலிதான ஒப்பந்தத்திற்கு தேவையானவற்றை விபரித்தல். |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 35 to 37 |
| **சரியான விடை : C** |

1.3

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 2.5<br>ஒப்பந்த முறிவுக்கான நிவாரணங்கள். |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 67 & 68 |
| **சரியான விடை : A** |

1.4

| |
|---|
| கற்கை வெளிப்பாடு 3.2.1<br>பொருட்கள் விற்பனை ஒப்பந்தமொன்றில் பிரயோகிக்கக்கூடிய உட்கிடையான நிபந்தனைகள் மற்றும் உத்தரவாதங்களை விபரித்தல். |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 86 |
| **சரியான விடை : B** |

1.5

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 4.1.1<br>காசோலைகள், மாற்றுண்டியல்கள் மற்றும் சத்திய கடதாசிகள் ஆகியவற்றை பொருள்வரையறை செய்து வேறுபாடுகளை இனங்காணல். |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 102 |
| **சரியான விடை : D** |

1.6

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 5.7.6<br>பங்காளருக்கும் மூன்றாம் தரப்பினருக்கும் இடையிலான தொடர்பினை குறிப்பிடுதல். |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 148 & 149 |
| **சரியான விடை : C** |

NOT FOR SALE

1.7

| | 
|---|
| கற்கை வெளிப்பாடு : 7.2.1<br>பணிக்கொடை உரித்தினை விபரித்தல். |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 212 |
| **சரியான விடை : B** |

1.8

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 7.3 |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 203 - 205 |
| **சரியான விடை : C** |

1.9

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 7.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 205 - 209 |
| **சரியான விடை : C** |

1.10

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 8.2.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 223, 224, 226, 227 & 233. |
| **சரியான விடை : A** |

**(2 x 10 = மொத்தம் 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

# பிரிவு 2

**விடை 02**

2.1

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 1.4.1 & 1.4.2 |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 22 & 23 |
| இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பச் சபையின் பிரதான தொழிற்பாடுகள் கீழ்வருமாறு:<br><br>குறிப்பிட்ட வியாபாரத் தாளாண்மைகளின் நிதிக்கூற்றுக்களை தயாரித்து முன்நிலைப் படுத்தல் மற்றும் கணக்காய்வில் .லங்கைக் கணக்காய்வு நியமங்கள் மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் ஒத்திசைவினை கண்காணித்தல். |

2.2

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 3.4.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 93 |
| விற்பனைப் பெறுமதி செலுத்தப்படாத விற்பனையாளருக்கு செல்வழியில் பொருட்களை தடைசெய்வதற்கான உரிமை (stoppage in transit) கீழ்வரும் சந்தர்ப்பங்களில் கிடைக்கப் பெறும்:<br><br>• வாங்குனர் பணமுறிவு (insolvent) அடைதல்<br><br>• பொருட்கள் செல்வழியில் இருத்தல். |

NOT FOR SALE

2.3

| கற்கை வெளிப்பாடு: 4.3.1 |
|---|
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 107 |
| 1927 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மாற்றுண்டியல்கள் ஒழுங்குச் சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கு அமைய மாற்றுண்டியலின் ஈற்றில் வைத்திருப்பவரின் உரிமைகள் கிழ்வருமாறு:<br><br>A. அவர் தமது சொந்தப் பெயரில் உண்டியல் மீது வழக்கு தொடரலாம்.<br><br>B. முந்திய தரப்பினரின் உடைமை குறைபாடுகளிலிருந்து விடுபட்டவராக உண்டியலை கொண்டிருப்பார்.<br><br>C. அந்த உண்டியலுக்கு பரிப்புடைய சகல தரப்பினருக்கும் எதிராக கொடுப்பனவினை வற்புறுத்தக்கூடும்.<br><br>D. அவரின் உடமை குறைபாடுடையதாக உள்ளபோது, அவர் அந்த உண்டியலை கைம்மாறினால், அந்தக் காலத்தில் அவருக்கு பணம் செலுத்துபவர் உண்டியலின் செல்லுபடியாகக்கூடிய தீர்ப்பனவினை பெறுவர் |

2.4

| கற்கை வெளிப்பாடு: 5.3 |
|---|
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 129 & 130 |
| முதல்வரின் அனுமதியின்றி முகவர் இரகசிய இலாபம் உழைத்தால் முகவராண்மைச் சட்டத்தின் கீழ் முதல்வருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் வருமாறு:<br><br>A. முகவருக்கு அவரின் பணிசை மற்றும் ஊதியத்தை செலுத்த மறுத்தல்.<br><br>B. முகவராண்மை ஒப்பந்தத்தை இரத்துச் செய்தல் (Repudiate)<br><br>C. முகவரிடமிருந்து இரகசிய இலாபத்தினை அறவிடுதல்<br><br>D. முகவரை வேலையிலிருந்து விலக்குதல் |

NOT FOR SALE

2.5

| கற்கை வெளிப்பாடு: 8.2.1 (2003 ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டம் ) |
|---|
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 228 |
| 2003 ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தினால் ஏற்கப்பட்ட புலமைச் சொத்துக்களின் வகைகள் கீழ்வருமாறு:<br>• பதிப்புரிமை (Copyright)<br>• கைத்தொழில் வடிவமைப்புக்கள் (Industrial designs)<br>• ஆக்க உரிமைகள் (Patents)<br>• குறிகளும் வியாபாரக் குறிகளும் (Marks and trademarks)<br>• வியாபாரப் பெயர்கள் (Trade names)<br>• ஒருங்கிணைந்த சுற்றுக்களின் தளவடிவமைப்பு (Layout designs of integrated circuits)<br>• புவியியற் குறிப்பீடுகள் (Geographical indications)<br>. |

**(2 x 5= மொத்தம் 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

# SECTION 3

**விடை 03**

(a)

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு: 2.2.2 | |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 50 & 51 | |

தருநிலையில் கூறப்பட்ட உண்மைகள், K முற்றுமுழுதான தவறான நம்பிக்கையில் முற்றிலும் வேறுபட்ட தன்மைகொண்ட ஒப்பந்தத்தில் தான் கையெழுத்து இடுவதாக எண்ணி ஏற்படுத்திய ஒப்பந்தத்தை காட்டுகின்றது. இது ஒப்பந்தத்தின் தன்மையிலேயே தவறினை காட்டுகின்றது.
(1 புள்ளி)

தரப்பட்ட தகவல்களின்படி, தவறான ஆவணத்தில் கையொப்பம் இட்டதில் K இன் தரப்பில் கவனவீனம் இல்லை என்பது தெளிவு. (1 புள்ளி)

எனவே அத்தகைய தவறின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் வலுவற்றது. (1 புள்ளி), எனவே, இந்த ஒப்பந்தம் K யினை கட்டுப்படுத்தாது. (1 புள்ளி)

இதே விதமான சம்பவம் கீழ்வரும் வழக்கில் ஆராயப்பட்டுள்ளது :

<u>வழக்கின் பெயர் :</u>

**Foster v Mackinnon** (1869) L.R. 4.P. 704

<u>வழக்கின் தரவுகள் :</u>

வயதுமுதிர்ந்தவரான M உத்தரவாதமென நினைத்து மாற்றுண்டியல் ஒன்றில் புறக்குறிபபு இடுகின்றார். இந்த புறக்குறிப்பிடுதலில் M இன தரப்பில் கவனவீனம் எதுவும் இல்லையென ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

<u>தீர்ப்பு :</u> புறக்குறிப்பிடுதலில் M கவனவீனமாக நடந்துகொள்ளவில்லை ஆதலினால் அந்த ஒப்பந்தம் வலுவற்றது. எனவே அவரை கட்டுப்படுத்தாது.

**(வழக்கின் பெயரை குறிப்பிடுவதற்கு அல்லது தொடர்பபட்ட வழக்கின் தரவுகளையும் தீர்ப்பினையும் சுருக்கமாக கூறுவதற்கு – 1 புள்ளி)**

**(மொத்தம் : 5 புள்ளிகள்)**

NOT FOR SALE

(b)

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு: 2.4.1 | |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 65 & 66 | |

தரப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் வரவேற்பு மண்டபம் மக்கள் எழுச்சியால் அழிவடைந்ததன் காரணமாக, நிகழ்வினை நடத்த முடியவில்லை.

இந்தச் சம்பவம் (civil commotion) ஒப்பந்தத் தரப்பினரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும்.

மேலும் இந்தச் சம்பவம் எந்தவொரு ஒப்பந்தத் திரப்பினரதும் தவறினால் ஏற்பட்டதல்ல.

மேற்படி காரணிகள் இருக்கும்போது, ஓப்பந்தச் சட்டத்தின் கீழ் இது ஒப்பந்த நிலைகுலைவு எனப்படும். எனவே, தரப்பட்ட தருநிலையில் வரவேற்பு மண்டபம் தொடர்பில் ஒப்பந்தத்தில் நிலைகுலைவு ஏற்பட்டுள்ளது.

ஓப்பந்தச் சட்டத்தின்படி, ஒப்பந்தமொன்றில் நிலைகுலைவு ஏற்படும்போது, அந்த ஒப்பந்தம் விடுவிக்கப்படலாம்.

எனவே, தரப்பட்டுள்ள தருநிலையில் ஒப்பந்த நிலைகுலைவு காரணமாக ஒப்பந்தத் தரப்பினர் தமது கடப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்படுவர்.

தரப்பட்டுள்ள தருநிலையை ஒத்த சம்பவம் கீழ்வரும் வழக்கில் ஆராயப்பட்டுள்ளது:

<u>வழக்கின் பெயர் :</u>
**Taylor v Caldwell** (1983) 122 ER 309

<u>வழக்கின் தரவுகள் :</u>

T என்பவர் C என்பவரிடமிருந்து இசை மண்டபமொன்றினை வாடகைக்கு பெற்றிருந்தபோதிலும், முதலாவது இசைநிகழ்வுக்கு முன்னர் மண்டபம் தீப்பிடித்து அழிந்துபோனது. இந்த நிகழ்வை ஒழுங்குபடுத்துவது தொடர்பில் T சில செலவுகளை செய்திருந்தார் அவர் C யிடமிருந்து இந்தச் செலவுகளுக்காக நட்டஈடு கோரினார்.

<u>தீர்ப்பு:</u> மண்டபம் அழிந்ததற்கு எந்த ஒரு தரப்பும் காரணமல்ல. எனவே, ஒப்பந்த நிலைகுலைவு காரணமாக ஒப்பந்தத் தரப்பினர் தமது கடப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்படுவர். எனவே, C யிடமிருந்து நட்டஈடு கோருவதற்கு T உரித்துடையவர் அல்ல.

**[மொத்தம்: 10 புள்ளிகள்]**

NOT FOR SALE

**விடை 04**

(a)

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு: 3.3.1 | |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 90 | |

பொருட்கள் விற்பனை ஒழுங்குச் சட்டத்தின்படி, ஏலவிற்பனை மூலம் பொருட்கள் விற்பனை செய்யப்படும்போது, ஏலவிற்பனையாளர் சுத்தியலை வீழ்த்தி விற்பனை முடிவினை அறிவிக்கும் போது விற்பனை முழுமை பெறுகின்றது.

அதாவது ஏலவிற்பனை ஒன்றில் சுத்தியலின் வீழ்ச்சியுடன் பொருளின் உடமை வாங்குனருக்கு மாறுகின்றது.

எனவே, மேற்படி கோட்பாட்டினையும் வழக்குச் சட்டத்தையும் கருத்திற் கொள்ளும்போது, சுத்தியலின் வீழ்ச்சியுடன் வள்ளத்தின் மீதான உடமை ரொம்முக்கு (T) மாறிவிட்டது.

T கையொப்பமிட்டு உடன்படிக்கையை ஏற்படுத்தியபோது வள்ளத்தின் உடமை (சுத்தியலின் வீழ்ச்சியுடன்) ஏற்கனவே T க்கு மாறியிருந்தது. எனவே, உடமை மாற்றம் தொடர்பில் அந்த உடன்படிக்கை எந்தவொரு தாக்கத்தையும் கொண்டிராது.

எனவே, வள்ளத்தின் உடமை இன்னும் தன்னிடமே இருக்கின்றதெனும் J யின் கோரிக்கை தவறானதாகும்.

தரப்பட்டுள்ள தருநிலையை ஒத்த சம்பவம் கீழ்வரும் வழக்கில் ஆராயப்பட்டுள்ளது:

<u>வழக்கின் பெயர்:</u>
**Dennant v Skinner** [1948] 2 K.B. 164

<u>வழக்கு விபரங்கள் :</u>
டேனன்ட் (D) மோட்டார் கார் ஒன்றினை ஏலவிற்பனைமூலம் (சுத்தியலின் வீழ்ச்சியுடன்) K க்கு விற்றார். காரினை எடுத்துச் செல்ல முன்னர் K காசோலையொன்றினை வழங்கி காசோலை தேறும்வரையில் காரின் உடமை மாறாது என்பதற்கு உடன்படிக்கை ஒன்றில் கையொப்பம் இடவேண்டி இருந்தது. பின்னர் காசோலை தேறவில்லை.

<u>தீர்ப்பு:</u> சுத்தியலின் வீழ்ச்சியுடன் காரின் உடமை வாங்குனருக்கு (ஏலம் கேட்டவருக்கு) மாறிவிட்டது. எனவே, பின்னர் மேற்கொண்ட உடன்படிக்கை K யிடமிருந்து மீளவும் மாறுவது பற்றிய தாக்கம் எதனையும் கொண்டிருக்கவில்லை.

(b)



NOT FOR SALE

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 5.2.1 |
| கற்கைப் புத்தக தொடர்பு – பக்கம் 121 |

தரப்பட்ட சந்தர்ப்பத்தில், S கம்பனி முகாமைப் பணிப்பாளராக செயற்பட்டபோது பணிப்பாளர் சபை மௌனம் காத்தது சபை அவர் முகாமைப் பணிப்பாளராக செயற்பட்டதை உட்கிடையாக அங்கீகரித்ததனை காட்டுகின்றது. அதாவது, இந்த சந்தர்ப்பத்தில் SPL கம்பனியின் முகாமைப் பணிப்பாளராக S இனை சபை உட்கிடையாக அங்கீகரித்துள்ளது.

கம்பனியின் முகாமைப் பணிப்பாளர் ஒரு முகவர் ஆதலினால், S க்கும் SPL க்கும் இடையில் முதல்வர் - முகவர் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

முகவராண்மைச் சட்டத்தின்கீழ், முகவரொருவர் முதல்வர் சார்பாக ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தங்கள் முதல்வரை கட்டுப்படுத்தும்.

**குறிப்பு:**
**மாறாக,**
மாணவர் முகவராண்மைச் சட்டத்தை தொடர்புபடுத்தி உட்கிடையாக இதனை தெரிவித்து இருந்தால் மேற்குறிப்பிட்ட 02 புள்ளிகளும் வழங்கப்பட வேண்டும்.

எனவே, தரப்பட்ட சந்தர்ப்பத்தில், T யுடன் S செய்துகொண்ட ஒப்பந்தம் செல்லுபடியாவதுடன், SPL இனை கட்டுப்படுத்தும்.

தரப்பட்டுள்ள தருநிலையை ஒத்த சம்பவம் கீழ்வரும் வழக்கில் ஆராயப்பட்டுள்ளது:

<u>வழக்கின் பெயர்:</u>
**Hely-Hutchinson v Brayhead Ltd** [1968] Q.B. 549

<u>வழக்கு விபரங்கள்:</u>
புணிப்பாளர் சபையொன்றின் தலைவர் முகாமைப் பணிப்பாளரின் வகிபாகத்தை எடுத்துக் கொண்டு வேறொரு கம்பனியின் இழப்பீட்டிற்காக கம்பனி சார்பாக ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொண்டார்.
<u>தீர்ப்பு:</u> தலைவரை முகாமைப் பணிப்பாளராக செயற்பட அனுமதித்ததன் மூலம் சபையானது தலைவர் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு உட்கிடையாக அங்கீகாரம் அளித்துள்ளது.

**(மொத்தம்: 10 புள்ளிகள்)**

NOT FOR

## பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்லூ அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

---

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.

---